

# பனிமயம்

சனவரி 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, வணக்கம். நலந்தானா?

அனைவருக்கும் மீண்டும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்களையும், புத்தாண்டு ஆசிகளையும் அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டவர் மீண்டுமாக ஒரு புதிய ஆண்டைத் தந்திருக்கிறார். கடந்த ஆண்டு முழுவதும் காத்திட்ட இறைவனுக்கு நன்றி கூறி புதிய ஆண்டினைத் தொடங்குவோம். கடந்த ஆண்டில் நம் உள்ளத்து விருப்பங்களில் சில நிறைவேறாமல் போயிருந்தாலும் இந்த ஆண்டிலே இறைவன் அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பார் என்கின்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டைத் தொடங்குவோம். கடந்த ஆண்டின் கசப்பான அனுபவங்களை மறந்து புதிய ஆண்டில் மகிழ்ச்சியோடு நடைபோடுவோம். புதிய ஆண்டிலே புதிய எண்ணங்களோடும், புதிய திட்டங்களோடும் வாழ்க்கையைத் தொடருவோம்.

இம்மாதத்திலேதான் நாம் நன்றியின், அறுவடையின் விழாவையும் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு நாளும் நாம் உண்டிட தன் உதிரத்தையே வியர்வையாக சிந்தி உணவுப் பொருட்களை விளையச் செய்யும் விவசாயிகளை நினைத்துப் பார்ப்போம். “உழவன் சேற்றில் கால் வைக்கவில்லையெனில் நாம் சோற்றில் கை வைக்க முடியாது” என்னும் முதுமொழியை நினைவில் கொண்டு உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம். ஒவ்வொரு சோற்றுப் பருக்கையும் உழவனின் ஒவ்வொரு வியர்வைத் துளி என்பதை மறக்கக் கூடாது. இறைவன் அன்றாட உணவைக் கொடுத்து ஆசிர்வதிப்பதற்காக நன்றி கூறுவோம். உணவைக் குறை சொல்லாமலும், விரயம் செய்யாமலும் நன்றி உணர்வோடு உண்ணக் கூடிய நல்ல பழக்கத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்போம்.

அனைவருக்கும் தை திருநாளின் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறேன்.

God Bless You All.

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 26 தாரகை 5

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### கல்வி உரிமைக்காக...

புலம்பெயர்ந்தோர், ஏதிலியோர் மற்றும் போரினால் பாதிக்கப் பட்டவர்களுக்கான கல்வி உரிமை, ஒரு சிறந்த உலகத்தைக் கட்டியெழுப்பத் தேவை என்பது எப்போதும் மதிக்கப்பட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. புதுப் பிறவி! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. நலிந்த நம்பிக்கை துளிர்விட . . . . . . . . . . . . . . . . 8
ம. வெனான்சியுஸ்

4. புலம் பெயர்ந்தோரின் ஆறுதலே! . . . . . . . . . . . . 10
ரோஸ் சேவியர்

5. அன்னை மரியா இரக்கத்தின் ஊற்று . . . . . . . . 12
அண்டோ மோத்தா

6. தந்தையின் அன்பு . . . . . . . . . . . . . . . . . . . . 14
சுரேஷ்

7. விவிலியப்போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . . . 15

8. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . . 18

9. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 21

10. உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு . . . . . . . . . . . 22
பனிமய சுகந்தி

மரியன்னையின் திருப்பெயர்கள்

15

# வல்லமையுள்ள கன்னி



"நான் ஆண்டவரின் அடிமை" என்று தம்மைத் தாழ்த்திக் கொண்ட அன்னை மரியாவை "வல்லமையுள்ள கன்னி" (Virgin Most Powerful) என்று அழைப்பது சற்று வியப்பானதுதான். அது மட்டுமல்ல, வல்லமை என்னும் சொல்லே கடவுளுக்கு உரியதல்லவா? அதை மரியன்னைக்குப் பயன்படுத்தலாமா என்னும் கேள்வியும் சிலருக்கு எழலாம்.

உண்மைதான், வல்லமை என்பது கடவுளின் இயல்பு. அவர் மட்டுமே எல்லாம் வல்லவர். "இதோ! இறைவன் வல்லவர்; அவர் வல்லமையும் ஞானமும் கொண்டவர்" (யோபு 36:5) என்கிறார் யோபு. "ஆண்டவர் என் கற்பாறை; என் கோட்டை; என் மீட்பர். என் இறைவன்; எனக்கு மீட்பளிக்கும் வல்லமை" (திபா 18:2) என்று போற்றுகிறார் திருப்பாடல் ஆசிரியர். "கடவுளின் திருப்பெயர் என்றென்றும் வாழ்த்தப்படுவதாக. ஏனெனில், ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியன" (தானி 2:20) என்கிறது தானியேல் நூல்.

இருப்பினும். இந்த வல்லமையைத் தம் சீடர்களுக்கு இயேசு வழங்கினார் என்பது "இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து, பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார்" (லூக் 9:1) என்று நற்செய்தி நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பவுலடியாரும் "கடவுளின் வல்லமையைப் பெற்றிருக்கிறோம்" (2 கொரி 6:7) என்றும், "நான் என் வலுவின்மையைப் பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும்" (2 கொரி 12:9) என்றும் சான்று பகர்ந்துள்ளார்.

சீடர்களுடன் இறைவல்லமையைப் பகிர்ந்த இயேசு, கடவுளின் திருவுளத்தை முற்றிலும் நிறைவேற்றிய தம் தாயுடன் பகிர்ந்துகொள்ள மாட்டாரா?

அது மட்டுமல்ல, "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" (லூக் 1:35) என்று வானதூதர் மரியாவிடம் உரைத்ததை நாம் அறிவோம். மரியன்னை தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்றிருந்தார்.

எனவேதான், அவரது பரிந்துரை வல்லமை மிக்கதாய் இருக்கிறது. கானாவூர் திருமணத்தில் அவரது வல்லமைமிக்க பரிந்துரை இயேசுவின் முதல் புதுமையை நிகழ்த்தியது. எனவேதான், "உமது மன்றாட்டுகளின் உதவியைக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை" என்று புனித பெர்னார்தின் மன்றாட்டில் நாம் எல்லாருமே அறிக்கையிடுகிறோம்.

இறைவார்த்தையும், நம் அனுபவங்களும் மரியா வல்லமை மிக்க கன்னி என்பதைப் பறைசாற்றுகின்றன.

★

16

# பரிவுள்ள கன்னி



அன்னை மரியா பரிவுள்ள கன்னி (Virgin Most Merciful) என்று வாழ்த்துகிறது லொரெட்டோ மன்றாட்டு மாலை. அன்னை மரியா பரிவுள்ளவர், மிகவும் இரக்கமுள்ள தாய் என்பதை நமது அனுபவத்தின் வாயிலாக நாம் அறிவோம். விவிலியமும் அவரது பரிவுள்ளத்திற்கு சான்று பகர்கிறது. கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்தபோது, இயேசுவிடம் பரிந்துபேசி தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றவைத்தது அவரது பரிவுதானே!

உண்மையில் பரிவு என்பது இறைவனின் இயல்பு. "ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்" (விப 34:6) என்றும், "ஆண்டவர் பரிவும் இரக்கமும் உள்ளவர்; பாவங்களை மன்னிப்பவர்; துன்ப வேளையில் காப்பாற்றுகிறவர்" (சீஞா 2:11) என்றும் வாசிக்கிறோம். மரியாவை அருளால் நிரப்பிய தந்தை இறைவன், அவரைத் தமது பரிவு என்னும் பண்பாலும் நிரப்பினார் என்று நாம் நம்பலாம்.

மேலும், பரிவு என்பது இயேசுவின் முதன்மைப் பண்புகளுள் ஒன்றாகவும் இருந்ததை நற்செய்தி நூல்கள் பல இடங்களில் பதிவு செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, "திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார். அவர்களுக்கு இறைவார்த்தையை அறிவித்தார். அப்பத்தைப் பலுக்கி பசியைப் போக்கினார்" (மத் 9:36). "பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவுகொண்டார்; அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார்" (மத் 14:14). இயேசுவின் பரிவு அவர் தாயிடமும் விளங்கியது என்று நாம் துணிவுடன் சொல்லலாம்.

பரிவு என்பது தூய ஆவியின் கனி (கலா 5:22) என்றும் விவிலியம் சொல்கிறது. தூய ஆவியால் நிரப்பப்பட்ட அன்னை மரியாவும் பரிவு நிறைந்தவராக இருந்தது இயல்பானதே.

பழைய ஏற்பாட்டின் மாண்புமிகு பெண்களுள் ஒருவரான ரூத்து பல வகைகளில் மரியன்னையின் முன்னோடியாக விளங்குகிறார் என்று எழுதியுள்ள திருமறைத் தந்தையர் வியப்பான ஓர் ஒப்பீட்டை முன்வைத்துள்ளனர். ஒருநாள் ரூத்து "ஒரு வயலுக்குப் போய் அறுவடையாளர்கள் பின்னால் சென்று, அவர்கள் சிந்திய கதிர்களைப் பொறுக்கிச் சேர்த்தார்" (ரூத் 2:3) என்பது ரூத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ள ஒரு சிறிய தகவல். ஆனால், இதனைத் தூய ஆவியாரின் தூண்டுதலால் புரிந்துகொண்ட திருமறைத் தந்தையர் மேய்ப்புப் பணியில் ஆர்வத்தினாலோ, அலட்சியத்தினாலோ அருள்பணியாளர்கள் சிந்துகிற ஆன்மாக்களை அன்னை மரியா பரிவுடன் பொறுக்கிச் சேர்க்கிறார் என்று சொல்லி நம்மை வியக்க வைக்கின்றனர். ஆன்மாக்கள் மீதும், அருள்பணியாளர்கள்மீதும் மரியா கொள்ளும் பரிவை இதைவிட மேலாக விளக்க முடியுமா?



அருள்பணி. குமார்ராஜா

# புதுப் பிறவி!



★ "ஆண்டவரே! நீர் என் விளக்கிற்கு ஒளியேற்றுகின்றீர். என் கடவுளே, நீர் என் இருளை ஒளிமயமாக்குகின்றீர்" -திபா 18:28.

★ "ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர். உம்முடைய வழிகள் எல்லாம் வளம் கொழிக்கின்றன" - திபா 65:11.

இதோ புதியதோர் ஆண்டு 2025! புதுப் பிறவி! பழையன போவதும், புதியன வருவதும் புளங்காங்கிதம் தருபவை.

பழைய பகலில்

இருந்து

புறப்படும்

புதிய ஜோதியே!

உலர்ந்த

எண் கணக்கில்

மலர்ந்த

புதிய தேதியே!

வருக... வருக!

**புதுப் பிறவி**

புதிதாகப் பிறப்பது என்பது என்ன? உடலால் மீண்டும் பிறப்பதோ, உயிரியல் ரீதியாகப் புதிதாகப் பிறப்பதோ அன்று. அது மனத்தால் நிகழும் நிகழ்வு மட்டும் அன்று, அது ஒரு மறுமலர்ச்சி. புதிதாகப் பிறக்கும்போது, ஏற்கெனவே நம்மிடம் இருந்த பழைய எண்ணங்கள், தாக்கங்கள்,

ரணங்கள் எல்லாம் அழிந்துபோய் இருக்க வேண்டும். இது, எப்போதோ ஒரு நாளில் நடந்து முடிந்து விடுவதில்லை. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நமக்குள் நிகழ வேண்டும்.

நம் உள்ளத்தில் நீக்கமற நிறைந்துள்ள பயம், பழிவாங்கும் உணர்வு, அவநம்பிக்கை, வெறி, மூர்க்கத்தனம், தவறான மதிப்பீடுகள் ஆகிய அனைத்தும் இறந்தால்தான் நாம் புதிதாகப் பிறக்க முடியும்! (முனைவர். இலா. பிரான்சிஸ் சேவியர், சே.ச. – 'முடியும் என்றால் விடியும்').

ஒவ்வோர் குழந்தையும் மண்ணுலகில் பிறக்கும்போது, புது நம்பிக்கையும் பிறக்கிறது. அதுபோன்று, ஒவ்வொரு புது வருடமும் நமக்குள் நம்பிக்கையை விதைக்கிறது. நல்லது நடைபெறும், பழையன போய்த் தொலைந்து விடும். இனி வரும் நாள்களெல்லாம் மகிழ்ச்சியோடு வாழலாம் என்ற எதிர்பார்ப்பும் ஆவலும் பிறக்கின்றன.

புதிய ஆண்டு பிறந்துவிட்டது.... சரி.... நாம் புதிதாக அவதாரம் எடுத்துவிட்டோமா? – அல்லது இன்னும் பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறோமா?

எனக்குள் இருக்கும் பகைமை – வன்மம் – கோபம் – பழி வாங்கும் எண்ணம் – அலட்சியம் – சோம்பேறித்தனம் – போதைப் பழக்கம் – கண்முன்னால் நடைபெறும் அநியாயத்தைக் கண்டும் காணாமல் தவிர்த்துவிடும் ஈரமற்ற மனம் – மனிதாபிமானமற்ற மழுங்கல் போக்கு.... இவையெல்லாம் அப்படியே இருக்கட்டும், புது வருடப் பிறப்பன்று வழக்கம்போல் கூடிக் கும்மாளம் போட்டு, குடித்து மகிழ்ந்தால் போதும் என்றிருப்பதற்கா புத்தாண்டு?

**புதிய வானமும், புதிய பூமியும்**

"ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; பூவுலகம் மகிழ்வதாக!" – திபா 97:1.

"ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள். உலகெங்கும் வாழ்வோரே, ஆண்டவரைப் போற்றுங்கள்" – திபா 96:1.

'மெசியா'.... இறைவன் நம்மோடு இருக்கிறார். அவர் நம்மை வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டில், நல்லதே நடக்கும் என்ற எதிர்பார்ப்புடன் பயணத்தைத் தொடங்குவோம்.... நாம் எதை நினைக்கின்றோமோ அது நிச்சயமாக நடைபெறும்... நல்லன நினைப்போம்... நலம் பெறுவோம்.

நமக்காக மட்டுமே இறைவேண்டல் செய்யாமல், உலக மாந்தர் அனைவருக்குமாக, நாடு கடத்தப்பட்டு அவதிப்படும் ஏதிலி களுக்காக – புறந்தள்ளப் பட்டவர்களுக்காக – வாழ்விழந்தவர்களுக்காக – தனிமைச் சிறையில் வாடுவோருக்காக – வறுமைப் பிடியில் வாடித் தவிப்போர்க்காக இறையருளை இறைஞ்சுவோம்.

புதிய ஆண்டை, புதிய கொடையாக, புதிய ஆசீர்வாதமாக, புதிய வாழ்வாக, புதுப் பிறப்பாக நாம் வரவேற்க வேண்டும் .

"உலகெங்கும் வாழ்வோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்! மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்துப் புகழ்ந்தேத்துங்கள்" – திபா 98:4.

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்!" – திருவெளிப்பாடு 21:5.



கலாபன் வாஸ்

# நலிந்த நம்பிக்கை துளிர்விட



டிசம்பர் முடிந்து புத்தாண்டு ஜனவரி பிறந்துவிட்டது. டிசம்பர் மாதம் பனிக்காலம் குளிருடன் ஆரம்பித்தது.

சில ஆலயங்களில் காலைத் திருப்பலி கால் மணி நேரம் தாமதமாகத் தொடங்கும் என அறிவிப்புடன் நடந்தது. மூன்றாம் தேதி சவேரியார் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எட்டாம் தேதி மரியன்னை அமல உற்பவியான தினமாகக் கொண்டாடினோம். அவரவர் இல்லங்களில் தொடர் ஜெபமாலை செய்து மரியன்னைக்குப் புகழ் சாற்றினோம். இரைச்சல் மிகுந்த ஒலி பெருக்கிகள் அடங்கிய கேரல்ஸ் அணிவகுப்பினை வெற்றிப் பவனியாக வீதிகளில் வலம் வந்தோம்.

மிகமுக்கியமான ஒன்று யாதெனில், நமது மறைமாவட்டப் பாதுகாவலரான தூய சவேரியாரின் அழியா உடலைத் தரிசிக்கச் சென்று வந்ததாகும். சென்றவர்களைக் கேட்டால் சூப்பராக இருந்தது. உங்களுக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. நீங்கள் ரொம்பவும் மிஸ் பண்ணிவிட்டீர்கள் என்று விடை பகர்கின்றனர்.

சந்தர்ப்ப சூழ்நிலை மற்றும் பொருளாதாரச் சிக்கல் காரணமாக கோவா செல்ல முடியாதவர்கள் பலருண்டு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தோமாவிடம் கண்டதால் நம்புகின்றாய், காணாமலே விசுவசிப்பவர் பேறுபெற்றோர் என்றார். அதனால், சென்றவர்களிடம் கேட்டுப் புனிதரின் புதுமை பெற விரும்பியவரும் உண்டு.

ஆனால், சென்றவர்களிடம் கிடைத்த பதிலைச் சற்றுக் கூர்ந்து நோக்கினோமானால் அவர்களின் நம்பிக்கை மட்டுமல்ல கேட்பவர்களின் நம்பிக்கையும் நலிந்துபோகக் காரணமாக அமைகிறது. மீண்டும் துளிர்விட நாளாகுமோ?

முதல் நாள் பயணக்களைப்பில் தங்கும் விடுதியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு எழுந்து பத்து மணிக்குத்தான் புனிதரின் உடலைப் பார்க்கச் சென்றோம். கூட்டம் அதிகமாக இருந்ததால், வளைந்து வளைந்து சென்ற வரிசையில் அருகே செல்வதற்கே ஒன்றிரண்டு மணி நேரமாகிவிட்டது. அப்புறம் மதியம் சாப்பிட்டுவிட்டு உறங்கினோம்.

மாலை எழுந்து, கடற்கரைக்குச் சென்றோம். வெகுசுத்தமாக இருந்தது, மின்விளக்குகளின் வண்ணமயமான ஒளியில் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதைச் சொன்னால் புரியாது. அனுபவித்தால்தான் தெரியும். அங்கேயே மாலை டிபனை முடித்துக் கொண்டோம். சுமார்



ஏழு, எட்டு மணியளவில் விடுதிக்கு வந்து சுவைமிக்க இரவு உணவைச் சாப்பிட்டோம். பயணக் களைப்பில் தூக்கம் கண்களைத் தழுவியதால் படுக்கச் சென்றுவிட்டோம்.

மறுநாள் அதிகாலையிலேயே புனிதரைத் தரிசிக்கச் சென்று வரிசையில் நின்றோம். ஏழு மணி திருப்பலி முடிந்ததும் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது.

முதல் வரிசையில் நின்றதால் அரை மணி நேரத்தில் புனிதரின் உடலை அருகாமையில் சென்று பயபக்தியுடன் பார்த்தோம். ஜெபித்தோம். எட்டு மணிக்கு அறைக்குத் திரும்பி காலை உணவை முடித்தோம். அப்புறம் பக்கத்து அறைகளில் உள்ள தோழியரோடு சீட்டாட்டம் ஆடினோம். பாட்டுக்குப் பாட்டு, விளையாட்டுப் போட்டி என்று ஒரே ஜாலியாக இருந்தது. மாலை திண்பண்டம் சாப்பிட்டு முடித்ததும் விடுதிக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த தோட்டத்தில் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்தான். செம ஜாலியாக இருந்தது.

கேட்டவர்கள் எல்லாம் பாடலாம் ஆடலாம் என்று ஏக்கத்துடன் இருந்தார்கள். கடைசியில் போன காரியம் என்னவென்றால் சில மணித்துளிகள் புனிதரின் அழியா உடலைத் தரிசித்ததுதான் மிஞ்சியது.

இதற்குத்தான் ஒரு மாத காலமாக ஆர்ப்பாட்டமெல்லாம். புத்தம் புதிய ஆடைகள், சூட்கேஸ், தங்க நகைகள் போட்டால் பாதுகாப்பில்லை என்பதால், இமிட்டேசன் வகை ஆபரணங்களை வாங்கிக் குவித்தனர். தினசரி காலை, மாலை மற்றும் இரவென ஐந்து நாள்களுக்கும் பதினைந்து வகையான மாடல்களில் அள்ளிக் குவித்தனர்.

கோவா திருப்பயணத்தில் பெரும்பாலும் மகளிர் அணியினரே பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். ஆலய வழிபாடுகளில், அன்பியங்களில், சபைகளில் மற்றும் ஆலயம் சார்ந்த தூய்மைப் பணிகளிலும் பெண்கள் பெருமளவில் பங்கேற்பார்கள் அல்லவா? அதேபோன்று ரயிலிலும் பெண்களின் ஆதிக்கம்தான்.

நள்ளிரவில் திரும்பியவர்களை அவரவர் கணவர் தூங்காமல் விழித்திருந்து அழைத்துச் செல்ல வந்தனர். வெகுசிலரின் கண்களில் ஏக்கம் காணப்பட்டது. மற்றும் சிலரின் கண்களில் துக்கம் காணப்பட்டது. காரணம் அவரவர்களுக்குப் புரிந்ததுதான்.

என்னம்மா? திருப்பயணம் எப்படி இருந்தது? சுடச்சுட பாலுடன் வந்த கணவன் பாசத்துடன் கேட்டான்.

ஏதோ இருந்தது?

என்னடி இழுக்குற?

வேற என்னங்க? உங்க கையாலே பெட் காபி குடித்து, அப்புறம் வேலைக்குச் சென்று வீடு திரும்பியதும் காபிடிபன் உங்க கையால சாப்பிட்டு, அன்பியம், சபை, ஆலயக் கூட்டம் சென்றுவிட்டு இரவில் நீங்கள் டின்னர் தயாரித்துத் தருவீர்களே அதை விரும்பிச் சாப்பிடுவது எல்லாம் அங்கே இல்லை. ஒரே போரடித்தது. நீங்களும் வந்திருக்கலாம். ஆனால், உங்களுக்கு அலுவலகத்தில் ஆடிட்டிங் என்று இருந்துவிட்டீர்கள் என்று புலம்பித் தள்ளினாள்.

நான்கு நாள் பிரிவில் வாடிய கணவன், தன் மனைவியின் புகழுரையைக் கேட்டு உள்ளம் குளிர்ந்தான். சரிசரி போய்த் தூங்கு. டம்ளரைக் கழுவிட்டு வருகிறேன். இல்லறம் என்ற நலிந்த நம்பிக்கை மீண்டும் துளிர் விட ஆரம்பித்தது.



ம. வெனான்சியுஸ்

# புலம் பெயர்ந்தோரின் ஆறுதலே!



உலக வரலாற்றில் எல்லா காலக்கட்டங்களிலும் புலம் பெயர்தல் முக்கிய பிரச்சனையாக உள்ளது. மக்கள் புலம் பெயரக் காரணங்கள் பல. வறுமை, வன்முறை, போர், இனமொழிக் கலவரங்கள் அல்லது பாகுபாடுகள், கொடுங்கோலாட்சி, பருவ நிலை மாற்றம், வேலையில்லா திண்டாட்டம் என்பன முக்கியமானவை. உலக மக்கள் தொகையில் 3.6 சதவீதம் புலம் பெயர்ந்தோர் என கணக்கிடப்படுகின்றது.. எண்ணிக்கை அதிகரிக்கிறதே தவிர குறைந்தபாடில்லை .ஐ.நா. சபை புலம் பெயர்ந்தோரின் நாளை டிசம்பர் 18ஆம் நாள் அனுசரிக்கிறது.

அகதிகள் என்போர் எந்த ஒரு நாட்டிலும் குடியுரிமை அற்றவர்கள் அல்லது குடியுரிமை இருந்தாலும் அந்த உரிமையுடன் தம் நாட்டில் வாழ இயலாமல் புலம் பெயர்ந்து அந்திய மண்ணில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். அகதிகளின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. ஏனெனில் தங்கள் நாட்டையும் , வீட்டையும் மட்டுமின்றி, உறவுகளையும், உடைமைகளையும் விட்டு, தங்கள் வாழ்வாதாரத்தை விட்டு மனதில் எதிர்கால எதிர்பார்ப்பு எதுவுமின்றி, பிள்ளைகளின் வாழ்வு, படிப்பு போன்ற மனசுமைகளோடு, இறைவன் ஒருவரையே நம்பி புலம் பெயர்கின்றனர்.

ஆதரவும் வழிகாட்டலும் இன்றி, அங்குள்ள குடிமக்களால் பகையாகவும், போட்டியாகவும் புதிய நாட்டில் அந்நியர்களாக வாழும் நிலை, அரசு அதிகாரிகள், காவல் துறையினர், முதலாளித்துவ அதிகாரம் போன்றவர்களின் சுரண்டலுக்கு ஆளாக வேண்டியிருக்கும் நிலை.

விவிலியத்தில் ஆபிரகாம் கடவுளின் அழைப்பிற்கு இசைந்து தன் வீட்டையும்

நாட்டையும் விட்டு பாலஸ்தீன நாட்டில் அந்நியராக வாழ்ந்தது அவரது கடவுள் நம்பிக்கையைக் காட்டுகிறது (தொநூ 12:1-3). நகோமி பஞ்சம் அதிகரித்ததால் வறுமையின் காரணமாக பெத்லகேம் நகரிலிருந்து மோவாபு நாட்டிற்கு செல்கின்றாள் (ரூத் 1 ; 1) அசீரிய நாடு கடத்தல் (கி.மு.722) பாபிலோனிய நாடு கடத்தல் (கி.பி. 586) போன்றவற்றால் அந்நியராகவும், அகதிகளாகவும் மக்கள் கொண்டுச் செல்லப் பட்டனர்.

தமிழ் நாட்டில் இனக்கலவரத்தால் இலங்கை தமிழர்கள் அகதிகளாக புலம் பெயர்ந்தனர். சமீபத்தில் மணிப்பூரில் மக்கள் வன்முறையினால் புலம்பெயர்ந்தனர். காசா, இஸ்ரயேல் போர், உக்ரைன், ரஷ்ய போர் இவற்றில் மக்கள் எங்கு செல்வது என்று பரிதவிக்கும் நிலைமையை நாம் கண்கூடாக தொலைக்காட்சி வழியாகக் கண்டு மனம் வேதனை அடைகிறோம்.

நம் திரு அவை 110 வது உலகப் புலம் பெயர்ந்தோர், அகதிகளுக்கான நினைவு நாள் செப்டம்பர் 24ஆம் நாள் கொண்டாடப் பட்டது. அதில் திருத்தந்தை பிரான்சிஸ், தனது செய்தியில், "ஒவ்வொரு காலகட்டத்திலும் புலம் பெயர்ந்தோர்களிடமும் இறைவனை நோக்கிச் செல்லும் இறைமக்களின் உயிருள்ள உருவத்தைக் காணுங்கள். மேலும் கடவுள் தம் மக்களோடு மட்டுமல்ல, அவர்களுக்குள்ளும் நடக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் புலன் பெயர்ந்தோர் தங்கள் பயணத் தோழராகவும், வழிகாட்டியாகவும் இறைவனை அனுபவிக்கின்றனர்" என்று கூறியுள்ளார். எனவே அவர்களுக்கு உதவும் நாளாக இந்நாள் அமைய வேண்டும் என்கிறார்.

ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவில் பெத்லகேமில் இயேசு பிறந்ததை அறிந்து கிழக்கிலிருந்து மூன்று ஞானிகள் பெத்லகேம் வந்து, ஏரோது அரசனிடம், "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரை வணங்க வந்தோம்" என்று கூறியதைக் கேட்டவுடன் கலங்கிய அரசன், குழந்தை இயேசுவைக் கொல்லத் தேடினான். ஆண்டவரின் தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, குழந்தையையும், தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு செல்ல அறிவுறுத்துகிறார்.. உடனே திருக்குடும்பம் குழந்தையைப் பாதுகாக்க எகிப்துக்கு அகதிகளாக வந்து இன்னல், இடுக்கண்கள், வழியில் மனதில் பயம், மேடு,பள்ளம், பாலைவனத்தில் அலைச்சல், போன்ற துன்பங்களை அனுபவித்ததும் அகதிகளின்பால் நாமும், சமுதாயமும், ஆட்சியாளரும் கொண்டிருக்க வேண்டிய அக்கறையை நமக்கு காட்டுகிறது.

எகிப்தில் உணவு ,இருப்பிடம் கொடுத்து உதவியிருக்கலாம். சிலர் உதவாமல் இருக்கலாம். உதவியவர்கள் தாங்கள் அறியாமலே இறைமகனையும், அவர் தாய் மரியாவையும் தந்தை யோசேப்பையும் உபசரித்து அவர்களின் ஆசீரைப் பெற்றிருப்பர்.

"அந்நியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்துவது உண்டு." (எபி 13:2). பிறக்கும் புத்தாண்டில் அகதிகளுக்கு மட்டுமல்லாது பிழைப்புக்காக, பாதுகாப்பு இல்லாமல் வரும் மக்களுக்கு சாதி, மத வேறுபாடின்றி நம்மாலான உதவி செய்ய முன் வருவோம். அகதியாக புலம் பெயர்வதில் உள்ள துன்பங்களை நன்கு அனுபவித்த அன்னை மரியா கடல் கடந்து அந்நிய நாட்டிற்கு சென்ற மக்களுக்கு என்றும் துணையாகவும், ஆறுதலாகவும் இருப்பார் என்பதில் ஐயமில்லை!



**ரோஸ் சேவியர்**

# அன்னை மரியா இரக்கத்தின் அரசி



இரக்கப் பணியே கிறிஸ்துவ வாழ்வின் மையமாக இருக்கிறது. இரக்கப் பணி இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. (திருத்தந்தை பிரான்சிஸ்)

பொதுவாகவே தாய்க்கு அடையாளம் என்பது அவளது இரக்கம் நிறைந்த மனது என்பது இவ்வுலகம் அறிந்ததே. அன்புக்கு அடுத்தபடியாக, இரக்கத்தை தன்னகத்தே உடையவள்தான் தாய் என்பவள். நமது கத்தோலிக்க திருச்சபையில் இரக்கத்திற்கு எடுத்துக்காட்டாய் திகழ்பவள்தான் நமது இரட்சகரை ஈன்றெடுத்த நேசத்துக்குரிய நம் தாய் அன்னை மரியா. அதிலும் குறிப்பாக நமது தாய்த் திருச்சபையான கத்தோலிக்கத் திருச்சபை அன்னை மரியாவை ஏன் இரக்கத்தின் அரசி என்று அழைக்கிறது?

ஏனெனில் மரியா இறைவனுடைய இரக்கத்தின் அதல பாதாளத்தினை அவர்கள் விரும்பும் நபருக்கு விரும்பும்போது, விரும்புகிற அளவுக்கு திறக்கிறார்கள். எனவே



அன்னை மரியா பாதுகாக்க விரும்பும் ஒருவர் எவ்வளவு பெரிய பாவியாக இருப்பினும், மீட்பு இன்றி சேதமுறுவதில்லை, என்றார் புனித பொனவெந்தூர்.

தம்மிடம் பரிந்து பேசக் கேட்கும் பெரிதும் கைவிடப்பட்ட பாவிகளை இரட்சிப்பதற்காகவே புனித கன்னி மரியா இரக்கத்தின் அரசியாக நியமிக்கப்பட்டுள்ளார். தம் உதரத்தில் நித்திய வார்த்தையைக் கருத்தரித்துப் பெற்றெடுத்தபோது புனித கன்னி மரியா கடவுளின் அரசில் பாதியைப் பெற்றார். இதன் மூலம் மரியா இரக்கத்தின் அரசியாகவும், இயேசு கிறிஸ்து நீதியின் அரசராகவும் ஆனார்கள்.

மரியா இரக்கத்தின் அரசி என்பது பல அர்த்தங்களைக் கொண்ட வலிமையும் செழுமையும் ஆன ஆழமானதொரு அர்த்தம் நிறைந்த வார்த்தையாகும். இதன் வழியாக நம் கடவுள் எப்படிப்பட்டவர், அக்கடவுளின் தாயாகிய அன்னை மரியாவின் குணங்கள் யாவை...? நமது மீட்பின் வரலாறு மற்றும் பாதை எப்படிப் பட்டது என்பதை அறியலாம்.

பிற்காலத்தில் விசுவாசிகளின் ஜெபத்திலும், வழிபாட்டிலும், கலை இலக்கிய ஓவியங்களில் மட்டுமல்லாமல், இறையியல் தளத்திலும், மரியாவை இரக்கத்தின் அன்னை என்று அழைக்கும் வழக்கம் மெதுவாகப் பரவத் தொடங்கியது.

எடுத்துக்காட்டாக 10ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஜெயோமெட்ரா அருளப்பர் என்பவர் மரியா முதலில் தன் பூவுலக வாழ்வின் பொழுதும், பிறகு விண்ணகத்திலிருந்து தன் இரக்கத்தைக் காட்டுகின்றாள் என்றார். மேலும் மனிதர்களை அதிகமாக அன்பு செய்யும் இறைவன் மரியாவை நமக்குத் தந்ததன் வழியாக இன்னும் இரக்கமுடையவர் ஆகின்றார்.

இறைவன் மனிதர் மீது வைத்த அளவு கடந்த அன்பினால் மரியாவைத் தேர்ந்தெடுத்து அவளை ஓர் இரக்கமுள்ளவராக மட்டுமல்ல, ஓர் நடுநிலையாளராகவும், கடவுளிடம் மனிதர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் ஒப்புரவுப் பணியில் ஒத்துழைப்பவராகவும் உயர்த்தினார்.

புனித மரியா எனும் இரக்கத்தின் அரசியே... உங்கள் உதவியால் மீட்பு பெற்ற பாவிகள்தான் தங்களுடைய மோட்சத்தில் கிரீடமானவர்கள். அவர்களுடைய மீட்புதான் இரக்கத்தின் அரசியான அன்னை மரியாவுக்கு பொருத்தமான மணிமுடியாகும் என்பது நாங்கள் அறிந்ததே.

எனவே நாம் ஜெபமாலை ஜெபிக்கும் ஒவ்வொரு நாளும் மரியே.... இரக்கத்தின் தாயே.... என்று அன்போடு அழைத்து அவளுடைய இரக்கத்தையும், துணையையும், அன்னையின் பாதுகாவலையும் வேண்டி இறை ஆசியை அவள் வழியாக நிறைவாகப் பெறவும், தம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இறைவனின் இரக்கத்தை வெளிப்படுத்திய அன்னை மரியா, ஓர் அன்னையின் பரிவோடு நம்மை ஒவ்வொரு நாள் வாழ்விலும், வழிநடத்த அன்னையிடம் வேண்டுவோம்.



**அண்டோ மோத்தா**



# தந்தையின் அன்பு

ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் மத்தியிலே ஒரு பழக்கமிருந்தது. ஒருவன் அரசனாக முடி சூட்டப்பட வேண்டுமானால், அவன் ஒரு காடு வழியாய் கடந்து சென்று வெள்ளம் பீறிட்டு வருகிற ஒரு நதியைத் தாண்டி அக்கரைக்குப் போக வேண்டும். அப்படி அவன் போய் விட்டானென்றால், அவன்தான் ராஜ்யத்தை அரசாள தகுதியுள்ளவன் ஆவான்.

ஆகவே, ராஜாவுக்கு வயதாகும்போது, தன்னுடைய மகனை அதற்கு பழக்குவிப்பதற்காகக் காடுகளிலே வேட்டையாட அழைத்துச் செல்வார். குறிப்பிட்ட காலம் வரும்போது எப்படி இந்த சிங்கம், புலி, கரடி, ஓநாய்கள் நிறைந்த காட்டைத் தாண்டி அந்த நதியைக் கடப்பது என்பது அவனுக்கு ஒரு போராட்டமாய் இருக்கும். இருண்ட காட்டில் பலவித சத்தங்கள் அவனை பயமுறுத்தும். காட்டு மிருகங்களின் இரைச்சல் அவனை நடுங்கச் செய்யும்.

ஒருநாள் ராஜாவின் மகன் அரசாள வேண்டிய நேரம் வந்தது. அப்போது, அவன் அந்த ஆற்றைக் கடப்பதற்காக காடு வழியாக நடந்து சென்றான். திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. அவன் பயந்து நடுங்கி விட்டான். அவனுடைய கையிலே ஒரு சின்ன விளக்கும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு சின்ன ஈட்டியும் இருந்தன. அந்த இருட்டிலே ஒரு சின்ன விளக்கை வைத்து பாதி தூரத்தைக் கடந்து விட்டான். இன்னும் பாதி தூரத்தைக் கடக்க வேண்டும்.

அந்தப் பாதி தூரத்தைக் கடப்பதற்குள் தனக்கு என்ன ஆபத்து வருமோ என்று அவன் திரும்பிப் பார்த்தபோது, அவனுக்கு சற்றே பின்னாலே ஒரு ஐம்பது அடி தூரத்தில் அவனுடைய தகப்பன் கையிலே வில்லை ஏந்தி, தன்னுடைய மகனைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அவனை அறியாமல் பின்பாக வந்து கொண்டிருந்ததைக் கண்டான்.

தன் தகப்பனைப் பார்த்ததும், நான் தனியாக இல்லை, என்னுடைய தகப்பன் என்னைப் பாதுகாக்கும்படி என்னோடு வருகிறார் என்று மீதி பாதையை தைரியமாய் நடந்து, தகப்பனோடு இணைந்து அந்த நதியிலே நீந்தி அடுத்த கரைக்குச் சென்றான். அங்கே, அவனை முடிசூட்டி அழைத்துக் கொண்டு போவதற்கு அவனுடைய ராஜ்ய மக்களெல்லாம் காத்திருந்தார்கள்.

அன்பு பிள்ளைகளே, உங்களுக்குத் தகப்பனாயிருக்கிற இயேசு கிறிஸ்து உங்களை ஒருபோதும் தனியாய் அனுப்புவதில்லை. அவர் உங்களைத் தேடி வந்து உங்களுக்காக ஜீவனைக் கொடுத்தார். தாயினும் மேலாய் உங்களை நேசிக்கிறார். உங்கள்மேல் மிகுந்த அக்கறையுள்ளவராய் உங்களுக்கு முன்பாகச் செல்லுகிறார். நீங்கள் பயப்பட வேண்டாம். இதுவரை உங்களை நடத்தினார். இனிமேலும் உங்களை வழிநடத்துவார்.

யூதருக்கு அரசராகப் பிறந்திருக்கிறார். உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். இம்மானுவேலராய் உங்களோடு கூட இருக்கிறார். அவரே ராஜாதி ராஜா.

அன்பார்ந்தவர்களே, உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் குடும்பத்தோடும், பிள்ளைகளோடும் மகிழ்ந்து கொண்டாடுகிற இந்த நன்னாளிலே இயேசு எல்லாவித ஆசீர்வாதங்களையும் உங்கள்மீது பொழியச் செய்வாராக.



சுரேஷ்

# விவிலியப் போட்டி 117

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## 1 பேதுரு

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**I. கோடிட்ட இடம் :**

1. ............................ மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார்
2. ஒருவர் மற்றவரோடு பழகும் போது ............................ ஆடையாய் அணிந்திருங்கள்.
3. நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில் நான் ............................ .

**II. சரியா? தவறா?**

1. மானிடர் அனைவரும் செடியைப் போன்றவர்.
2. தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்.
3. ஆண்டவரின் கண்கள் தீமையானவர்களை நோக்குகின்றன.
4. கட்டுவோர் புறக்கணித்த கல்லே முதன்மையான மூலைக்கல்லாயிற்று.

**III. ஒரே வார்த்தையில் விடையளி :**

1. அழியாத அலங்காரம் எது?
2. எப்பொழுது மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்?
3. நீங்கள் எதனால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்?

***விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.01.2025***

# விவிலியப் போட்டி 116 டிசம்பர் 2024

**விடைக்குறிப்புகள்**

## பொது திருமுகம் – யாக்கோபு 1–5

| | | |
|---|---|---|
| 1. | இரக்கமே | யாக் 2:13 |
| 2. | செல்வர்கள் | யாக் 1:10 |
| 3. | இஸ்ரயேலின் பன்னிரு குலத்தினருக்கும் | முன்னுரை |
| 4. | பேச்சில் தவறாதோர் | யாக் 3:2 |
| 5. | இறைவேண்டல் | யாக் 5:13 |
| 6. | ஐயப்பாடு கொள்பவர்கள் | யாக் 1:6 |
| 7. | இராகாபு | யாக் 2:25 |
| 8. | திருப்பாடல்களை | யாக் 5:13 |
| 9. | நீதி | யாக் 3:18 |
| 10. | யோபு | யாக் 5:11 |

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 198**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 118**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. பனிமயம் அன்பியம் **சுரேஷ் ஆனி**
2. பவுலடியார் அன்பியம் **லீமாரோஸ் ஜாய்**
3. பரிபூரண மாதா அன்பியம் **ஷெர்லின் ஜெனீஸ்**
4. பொம்பெயி மாதா அன்பியம் **இம்மாக்குலேட் சதீஷ்**

**பாராட்டுக்குரியவர்கள் : 114**

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா
7. சரோஜா
8. ஜெயா
9. லூர்க்காஸ் சகாயம்
10. சுஜிதா பெர்னி

**அன்னை தெரசா**
11. ரொவீனா
12. செல்வ ராணி
13. ரெய்ஸா சுஜய்
14. ஜான்சி ராணி
15. சாந்திஅந்தோனிசாமி
16. சுகன் மோனிஷா
17. சுரேஷ் பிரேமா
18. பெற்றி சூசையா

**அன்னை வேளாங்கன்னி**
19. டென்சி
20. நான்சி
21. கவாஷினி ஆல்வின்
22. ஆரோன் ஷாரோன்

**கிறிஸ்தரசர்**
23. லூரட் வசந்த்
24. செலஸ்கி கிளமெண்ட்
25. ஜூலியட் சாவியோ
26. ரெக்ஸ் கிரீன்வெல்
27. நேவிஸ்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
28. ராஜா ஐரின்

**திவ்ய பாலன் அன்பியம்**
29. பிரின்சி
30. சகாயராணி தன்ராஜ்
31. ஜோதிஸ்வரி
32. ஸ்டார்லக் ஏஞ்சலின்

**பாத்திமா மாதா**
33. ஜெசிந்தா கான்ஸ்டன்
34. ரீனா ராஜா
35. அனு ஆல்வின்
36. ஜெனிட்டா மைக்கேல்
37. ஸ்டெபி ரீகன்
38. பிச்சம்மாள்
39. சுகந்தா ஸ்டேனி

**இரக்கத்தின் மாதா**
40. பாப்டிஸ்டா
41. பிரைட்டன் ஜெரோபின்
42. இருதயம்மாள் கொன்சால்
43. சித்ராமோத்தா
44. சகாய ராணி
45. சேவியர்அம்மாள் கோமஸ்

**ஜெபமாலை மாதா**
46. சகாயம்மாள் பெனடிக்ட்
47. ஆக்னஸ் செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
48. டிரைபேனா
49. டெரன்சியா அரிஸ்டோ
50. அலெக்சான்ட்ரியா இன்பா
51. அந்தோனி சாமி
52. சேலிமா வினோத்

**காவல் தூதர்**
53. எலிஜா நோவா
54. ஜெயா அகஸ்டின்
55. சாந்தி ஆல்ட்ரின்
56. ஜோ ட்ரினிஷா
57. சார்லட் பிராங்க்
58. பிரிசில்லா
59. ஜெஸிமா கிளாரன்ஸ்
60. ரஜூலா அலாய்
61. வெனிட்டாள்
62. ரஸ்கின் வசந்தா
63. ஜூலியஸ்
64. திவ்யா மலர்

**குழந்தை தெரசா**
65. பெனி மொறாயிஸ்
66. பெர்லி டென்சன்
67. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
68. எமல்டா
69. பிரான்சிஸ் வாஸ்
70. மோனிகாசெபாஸ்டின்

**மணல் மாதா**
71. ரொசாரிகோமஸ்

**லூர்து மாதா**
72. சாண்டினா
73. ஆலிவர் வி. ராயன்
74. ஃபிலோ கோமஸ்
75. ஜெனோ சேவியர்
76. ரஜூலா ஜான் போஸ்கோ
77. ரோஸ்லின் தாமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
78. ஜோஸ்பின் பர்னாந்து

பனிமய அன்பியம்
79. மெர்சி;
80. ஜாக்குலின் வினோதினி
81. ராணி
82. ஜூடு ரதி

**பவுலடியார்**
83. ராஜா ரோஸ்லின்
84. ஒபிலியாதாமஸ்

**பரிபூரண மாதா**
85. ஜெனிஷா
86. சபனா கினிஸ்டன்
87. மெடோனா

**பொம்பெயி மாதா**
88. மேத்யூ கர்டோசா
89. டிஃபானி அண்டோ
90. ஜான்சி ராணி அமல்ராஜ்
91. லூடா கான்ஸ்டன்
92. அண்டோ எல்ஃபி

**இராயப்பர்**
93. டெய்ஸி

**சவேரியார்**
94. டெலிலா அமலன்
95. அனுஷ்யா பீட்டர்
96. ஜான்சி ஜெயகுமார்
97. ரூபா மனுவேல்
98. ஜோர்னஸ் ஜென்ஸி
99. வினிஸ்டா ஷெரின்
100. அன்டன் சகாயம்

**செபஸ்தியார்**
101. அந்தோனியம்மாள் டென்சிங்
102. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
103. பிரவீனா
104. ரேவதி ரஜூல்டன்
105. ஜெசிலா சேவியர்

**சிந்தாத்திரை மாதா**
106. நேசம்
107. ஜூடி ஆரோக்கியராஜ்
108. ராஜி ஜஸ்டின்
109. சுதா
110. டோனஸ் ராயன்

சிறுமலர் அன்பியம்
111. விஜி சகாயராஜ்
112. எல்சிட்டா ஆனந்த்
113. செலஸ்டின்

**சூசையப்பர்**
114. கிறிஸ் ரீஜோ
115. ஹேமலதா
116. மோனிஷா

**திருச்சிலுவை**
117. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
118. சரோலின் கில்டன்

**வியாகுலமாதா**
----



## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 80

**பரிசு பெறுபவர்கள் : 4**

119. சென்னை — கனிஷியஸ் விஷால்
120. பேட்டை — ஹெலனிட்டா
121. தூத்துக்குடி திரு இதயங்களின் பேராலயம் — பீட்டர் ஜெயந்தி
122. தூத்துக்குடி இஞ்ஞாசியார் கோவில் — சூசை நெவின்

## பாராட்டுக்குரியவர்கள் : 76

**சென்னை**
123. கமலஜோதி ஜெயசீலன்
124. ரெஜினா கிரகோரி
**கோயம்புத்தூர்**
125. ஆஷா தனசீலன்
**திண்டுக்கல்**
126. ரொசாலி
127. ஜெர்மேன்
**திருச்சி**
128. ஜெக ரெட்சகன்
129. மோனிட்டா கிறிஸ்டி
130. ஜான்சி ராணி
131. மேத்யூ விவேக்
132. ஜார்ஜ் சகாயராஜா
133, டோனி
**வேலூர்**
134. ஜாக்லின்
**மதுரை**
135. சகோ. ஜான்சிமேரி
136. ஜெஸிந்தா மேரி
**கொடைக்கானல்**
137. ஜெஸிந்தா மார்டின்
**திருநெல்வேலி**
138. மைக்கேல் அம்மாள்
**பரமக்குடி**
139. சைமன் சாந்தி
**ஆறுமுகநேரி**
140. ஜெயராணி
141. தொம்மை அந்தோணி
**வீரபாண்டியன் பட்டணம்**
142. ரேச்சல் ராயன்
143. மிசியா
**ஆலந்தலை**
144. பொன்சேகா
145. சகாயராணி
146. மரியம்மாள்
**உவரி**
147. அர்லின் ஈவ்லின்
**புன்னைக்காயல்**
148. சகோ. லோராமேரி
**ஏரல்**
149. ஜாய்ஸ் ரெத்னம்
**புதியம்புத்தூர்**
150. ஹெலன் அன்னமணி
**கோவளம்**
151. சரோபின் ஜோசப்
**சிப்பிக்குளம்**
152. ஜெனஸிஸ்
**உடன்குடி**
153. ஸ்நோவின்
**பெரியகுளம்**
154. குழந்தை தெரஸ்
**சங்கரன் கோவில்**
155. செல்வமேரி
**கயத்தாறு**
156. அமல்ராஜ்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
157. ரிமோல்டா
158. ரமோலா கமிலஸ்
**திரேஸ்புரம்**
159. கோல்வின் ஜேசுராஜ்
**குருஸ்புரம்**
160. பௌவுசி ஜோ மைக்கேல்
161. பிளாசி செல்வராஜ்
162. ஜான்சி மென்டிஸ்
163. ஆசீர்வாதம்
164. சபிதா ரெஸிங்டன்
165. டெல்பின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
166. சகாயம்
167. சுகிர்தா
168. ஷெரினா
169. டோமினிக்
170. பேபின் ரால்ஃப்
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
171. லிஜியா
172. செக்கரியா சாமுவேல்
**யூதா ததேயு கோவில்**
173. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
174. சகாயமேரி
175. ஆரோக்கிய சர்மிளா
176. இம்மானுவேல் சேகர்
177. ஜூடி ரீத்தம்மாள் மேரி
178. ரோஸ் சேவியர்
**அண்ணா நகர்**
179. வென்சி ராணி
**அந்தோணியார் கோவில்**
180. வயோலா ஜான்சன்
181. மென்சிலா லொயோலா
182. ரீடன்
183. இருதயம்மாள் கபிரியேல்
184. மகேஷ் சுஜாதா
**காந்தி நகர்**
185. ரியாலினோ
186. பேபி வால்டர்
187. அன்சிட்டா
188. பின்டன் சோஃபியா
189. ரமேஷ் நர்மதா
190. சாந்தினி
**பாத்திமா நகர்**
191. ரமேஷ் ஷர்மிளா
192. மேரி ஹேம்லின்
**சார்லஸ் கோவில்**
193. அல்போன்சா பர்னான்டோ
194. சகாயிற்றா மச்சாது
**புனித இஞ்ஞாசியார் கோவில்**
195. அலெக்ஸ் ஜோ ஆனந்த்
196. அருட்சகோதரி. சூசைரூபி
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
197. தயாபரராணி
198. வெர்ஜின்

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.



**63796 41209** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : **202**

இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : **198**

**குறிப்பு** ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 7)

## ஜனவரி- 2025

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பாலன்** |
| களப் பணியாளர் | : | **சகோதரர் தினகரன்** |
| பங்கு அலுவலகம் | : | 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 06.15–06.45*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2025*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*



## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுப் பேரவையின் **நிதிக்குழுக் கூட்டம் 12.12.2024** வியாழக்கிழமை மாலை 05.15 மணிக்கும், **செயற்குழுக் கூட்டம்** மாலை 06.15 மணிக்கும் **நேவிஸ் அரங்கத்தில்** நடைபெற்றன.

02. **13.12.2024** வெள்ளிக்கிழமை **பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டமானது** மாலை 07.00 மணிக்கு **அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்றது.

03. **பாலன் பிறப்புக்கான கொடியேற்றம் 15.12.2024** ஞாயிறன்று காலை இரண்டாம் திருப்பலி முடிந்ததும் நடைபெற்றது.

04. **லூர்து மாதா இளம்பெண்கள் சபையின் 5ஆவது ஆண்டு விழா 15.12.2024** ஞாயிறு காலை 06.30 மணி திருப்பலியில் கொண்டாடப்பட்டது. புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றத்துடன், புதிய உறுப்பினர்கள் நாடா அணிந்து சபையில் சேர்ந்தனர்.

05. **இறையடியார் அந்தோனி சூசைநாதரின் 142ஆவது பிறந்தநாள் 18.12.2024** அன்று புதன்கிழமை இரண்டாம் திருப்பலி முடிந்ததும் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது.

06. பங்கிலுள்ள **எளியோருக்கான கிறிஸ்து பிறப்புவிழா 19.12.2024** வியாழன் மாலை 04.00 மணிக்கு நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றது. நமது பங்கின் 90 நலிந்த பெண்களுக்குக் கிறிஸ்துமஸ் பரிசாக 5 கிலோ அரிசி, ஒரு சேலை, 500 ரூபாய் மதிப்புள்ள டோக்கன் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

07. பேராலயப் பங்கின் “பனிமய இளையோர்” முன்னெடுப்பில் **கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சிகள்** 25.12.2024 மாலை 06.30 மணிக்குப் பேராலய வளாகத்தில் நடைபெற்றன.

08. பங்கின் தம்பதியருக்கான ஆசீர்வாதத் திருப்பலி 29.12.2024 ஞாயிறு மாலை 05.30 மணிக்கு நடைபெற்றது. பொன்விழா, வெள்ளிவிழா காணும் தம்பதியரோடு மற்ற தம்பதியருக்கும் ஆசிகள் வழங்கப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 17. | டினோபியா | டோனி ரிசாந்த் - ஜாய்ஸ்லின் | 25.12.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 18. | ஜோயி அல்வரெஸ் | ஜெஃப்ரி - ஜோன்ஸ் அகிலா | 29.12.2024 | குழந்தை இயேசு |



### வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 24. | நிசான்யா | வசந்த் - ரிச் குயின் | 28.12.2024 | செபமாலை மாதா |
| 25. | பெர்னட் ஜோஷினி | அபெக்ஸ் -ஜெய்ஷிகா | 28.12.2024 | திருச்சிலுவை |
| 26. | கான்சப்டா ஃப்ரேஷியா | ஜியோஃப்ரி -ஷாலிமா | 28.12.2024 | பாத்திமா மாதா |
| 27. | லிட்டில் ஃபிளவர் அசென்கா | ஹால்டன் - ஜெனிபர் | 29.12.2024 | இராயப்பர் |
| 28. | ஜஃபிட்டா ஜீனா | பிரின்ஸ்டன் - சகாய ஸ்நோபா | 29.12.2024 | காவல் தூதர் |



### ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 15. | வசந்த் - கேத்ரின் | சவேரியார் | 27.12.2024 |



### செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 19. | ஜே.பி ரொட்ரிகோ | ஜோசப் | 27.11.2024 | ஜெபமாலை மாதா |
| 20. | லிஸ்போன் மேரி | ஆரோன் | 02.12.2024 | சிந்தாத்திரை மாதா |
| 21. | பிரேம்நாத் | ரொசாரி | 04.12.2024 | இரக்கத்தின் மாதா |
| 22. | ரிச்சர்ட் முறாய்ஸ் | மேரி | 05.12.2024 | சவேரியார் |
| 23. | ஜோசப் சில்வஸ்டர் | டெலிலா | 08.12.2024 | சவேரியார் |
| 24. | லூர்துசாமி | லீமாரோஸ் | 11.12.2024 | சிறுமலர் |
| 25. | அந்தோணியம்மாள் | அண்டோ | 13.12.2024 | அன்னை தெரசா |
| 26. | செலினம்மாள் | நாக்ஸ் | 15.12.2024 | அந்தோணியார் |

## நடைபெறவிருப்பவை

★ **புத்தாண்டு சிறப்புத் திருப்பலி 01.01.2025 அன்று காலை 08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை** அவர்களால் நிறைவேற்றப்படும். குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கப்படும். ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது. மாறாக, மாலை 05.30 மணிக்கு நற்கருணை ஆசீரும், குழந்தை இயேசு ஆசீர்வாதமும் நடைபெறும்.



★ 03.01.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 04.01.2025 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் – நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் அன்பு உணவு வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் – பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 26. | 07.01.2025 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின்குமார் | புத்தாண்டு ஆசிகள் |
| 27. | 14.01.2025 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆசிகள் பொங்கட்டும் |
| 28. | 21.01.2025 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆண்டவர் உங்களோடு |
| 29. | 28.01.2025 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இறைவனின் வாக்குறுதிகள் |



# பனிமய சாட்சியம்

111

**ரதி, பனிமய அன்னைப் பேராலய பங்கு**

நான் தூத்துக்குடி பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவள். என் பெயர் ரதி. என் தங்கை ஈரோடு மாவட்டத்தில் நர்ஸ் ஆக பணிபுரிந்து வருகிறாள். அவளுக்கு பணிமாற்றம் கிடைக்க வேண்டுமென்றால் ஐந்து லட்சம் அல்லது அதற்கு மேல் செலவழித்தால் தான் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அவளது கணவரோ எனக்கு மக்கள் மீது நம்பிக்கை இல்லை கடவுள் எனக்கு உதவி செய்வார் என்று முழுமனதாக நம்பினார்கள். நானும் ஒவ்வொருவரிடமும் சொல்லி யார் மூலமாவது அவளுக்கு பணிமாற்றம் கிடைத்துவிடாதா என்று நினைத்தேன். நான் ஒவ்வொரு நாளும் திவ்ய பலி பூசையில் அவளுக்காக ஒப்புக் கொடுத்தேன். மாதாவிடம் அழுது புலம்பி செபமாலை ஒப்புக் கொடுத்து செபித்தேன். மாதாவை நம்பினவர்கள் ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள் என மாதா என் தங்கையின் வாழ்க்கையில் ஒரு அற்புதத்தை செய்து விட்டார்கள். அவளே நினைத்து பார்க்காத வகையில் பணி மாற்றம் கிடைத்து விட்டது. பணிமாற்றம் கிடைத்தால் சாட்சி பகிருவேன் என்று வேண்டி கொண்டதன் பேரில் இந்த சாட்சியைப் பகிர்ந்து கொள்கிறேன். பனிமய அன்னைக்கு மிக்க நன்றி...

112

**பென்சியர், பாம்பன்**

எனது அம்மா பெயர் ரேவதி. அவருக்கு இரைப்பையில் கட்டி இருந்தது. மருத்துவர் ஆலோசனைப்படி ராம்நாடு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அறுவை சிகிச்சையின்றி குணப்படுத்த முடியாதென்று மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள். எனவே பனிமயத் தாயிடம் எனது தாய்க்கு சுகம் கிடைக்க கண்ணீரோடு மன்றாடினேன். பின்னர் மருத்துவமனைக்கு சென்று ஸ்கேன் செய்து பார்த்ததில் அறுவை சிகிச்சை தற்போது தேவையில்லை என்றும் மருந்து மாத்திரையின் மூலம் சரி செய்து விடலாம் என்றும் கூறினார்கள். தற்சமயம் அம்மா நல்ல சுகத்துடன் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். பனிமய அன்னைக்கு கோடான கோடி நன்றி...

---

# உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு

உலவும் தென்றல் காற்றாய்
உவகை பூக்கும் மலராய்
ஊற்றெடுக்கும் நல் நீராய்
உல்லாசம் எனும் ஊஞ்சலில்
உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு!
உறவுகள் யாவும் இணைந்து
உள்ளங்கள் அன்பில் பிணைந்து
உற்சாகம் மனதில் நிலைத்து
ஊழ்வினை தீமைகள் தொலைத்து
உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு!

உள்ளத்தை உறுத்தும் கவலைகள்
உதிரும் சருகாய் உதிர்ந்து
உதிக்கும் சூரியன் பிரகாசமாய்
உதயமாகி ஒளிகொடுத்து என்றும்
உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு!
உலக மக்கள் ஒன்றிணைந்து
ஊழல் ஆட்சிதனை வென்றொழித்து
உரிமை யாவும் பகிர்ந்தளித்து
உத்தம உலகம் படைக்க
உள்ளம் மகிழ எழுக புத்தாண்டு!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**பனிமய சுகந்தி**

# பனிமய மாதா சபை வாழ்த்துச்செய்தி



*பனிமய மாதா சபை தொடங்கிய நாள் :*
ஜெபமாலை மாதம் (அக்டோபர்) - 3வது ஞாயிறு
(20ம் தேதி அக்டோபர் 2024)

தூய ஆவியின் மாட்சியோடும், ஏழு கடற்துறை ஏக அடைக்கலத் தாயுமான திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின் பொற்பாதங்களில் எங்கள் பனிமய மாதா சபையை சமர்ப்பிக்கின்றோம்.

மாதாவின் பிள்ளைகள் அனைவருக்கும் **கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை**யும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உள்ளங்களிலும் இல்லங்களிலும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் பெருகட்டும். தீயவை ஒழிந்து நன்மைகள் அதிகரிக்க நலமும் செல்வ வளமும் பெருகட்டும்...



கடந்த 2 ஆண்டுகளாக நலிந்தோர்க்கான **கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகளை** செய்து வருவதுபோல் இந்த வருடமும் (28.12.2024) சனிக்கிழமை மாலை கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





இப்படிக்கு
என்றும் பணிவன்புடன்
**பனிமய மாதா சபை,**
**பரி. பனிமய மாதா பேராலயம், தூத்துக்குடி.**

# விண்ணக வாழ்வின் 30ஆம் நாள் நினைவு அஞ்சலி

வாழ்க்கைப் பயணத்தில் உம் வழிமுறைகள் எனக்குப் புகழ் பாக்களாய் உள்ளன
(திபா 119:54)



மண்ணில்
31.12.1947

விண்ணில்
08.12.2024

## M. ஜோசப் சில்வெஸ்டர்

(அமலன் பர்னாந்து)

வயது : 76

காற்றோடு கலந்த சுவாசம்...
கண்ணீராய் வடிந்த பாசம்...
உலகினை கடந்து போனாலும்...
உறவினை கடந்து போனாலும்...
ஓர் நல்ல மனிதனை உங்களோடு...
பயணித்தவர்கள் மறந்து போவார்களா...
உன் மனைவி துடிதுடிக்க
பிள்ளை கதறியழ
சொல்லாமல் சென்றாயோ
இறைவனடி சேர்ந்தாயோ...

என்றும் உங்கள் நினைவில் வாழும்

அன்பு மனைவி : J. டெலிலா பர்னாந்து
பாச மகன் : பிரைவின் பர்னாந்து
மருமகள் : மேரி கிரின் பர்னாந்து
அருமை பேரன் : ஜோவின் பர்னாந்து
மற்றும் குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின்
# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்

(எசாயா 62:3)



**தோற்றம்**
**08.05.1955**

**மறைவு**
**26.01.2024**

# N. அந்தோணியப்பா பர்னாந்து

**வயது : 68**

**நினைவுத் திருப்பலி**
**25.01.2025 சனிக்கிழமை**
**காலை 10.00 மணிக்கு**

*பிரிவால் துயருறும்*

**மனைவி : A. பிச்சம்மாள்**
**மகள்கள், மகன்**
**மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**

# FIRST YEAR REMEMBRANCE



# J. KENILTTAN MANGALARAJ

**27.06.1968 - 22.01.2024**

*Your presence we miss,*
*Your memories we treasure,*
*We walk on the trail;*
*You left behind;*
*Loving you always;*
*Forgetting you never.*

*Deeply remembered by*

*Wife* : **SHAKILA MANGALARAJ**

**Sons : K. MACHIO**

**R. JOEL**

*and*

***Family Members***

76B, South Emperor Street, Tuticorin - 1.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்.
தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் தடியும் என்னைத் தேற்றும்

## S. அலங்காரம் பர்னாந்து



பிறப்பு
05.08.1937

இறப்பு
16.01.2023

ஆண்டு இரண்டு ஆனது ஐயா
நானிலத்தில் நீ பிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு!
உறவுகளைத் தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டாய்!
இறைவனை நாடிவிட்டாய்!
உன்னை எண்ணித் தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்!
இறைவனை வேண்டுகின்றோம்!

பிரிவால் துயருறும்

மனைவி
ராஜேஸ்வரி
மற்றும்
குடும்பத்தினர்

# 25ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்.
உன்னை பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்



## பியோ ராயன் பர்னாந்து

பிறப்பு
10.12.1978

இறப்பு
11.09.1999

பிரிவால் துயருறும்

அம்மா : ராஜேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின்
# 20ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**11.01.2025**



பிறப்பு
15.10.1940

இறப்பு
11.01.2005

# J. அந்தோணிசாமி பர்னாந்து

வயது : 65

என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*

மகன் :
A. சேசையா பர்னாந்து

மருமகள் :
J. ஜெயஸ்ரீ பர்னாந்து

மகன் :
A. ஜாய்சன்

மருமகள் :
J. பமிலா

பேத்தி : J. ரேச்சல்

பேரன்கள் :
J. ஜெசாந் பர்னாந்து  J. ஜெர்விந் பர்னாந்து

மற்றும் குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493